மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான முன்னணி
நிறுவனம்
திருமாட்டி
புடைவைக் கடல்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 22 செவ்வாய்க்கிழமை (08 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 348

# தெற்கில் அரசியல் முறுகல் நிலை
# பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

## வன்செயல் வெடிக்கும் அபாயம்

கொழும்பு, நவம்பர் 8

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 24 மணி நேரமே இருக்கையில் — தென்னிலங்கையில் அரசியல் முறுகல்நிலை தீவிரமடைந்து வருவதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

வன்செயல் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இதுவரை ஐவரைப் பலி கொண்ட வன்செயல்களைத் தொடர்ந்து, உணர்வலைகள் கொந்தளிக்கும் பகுதிகளில் பொலீஸ் ரோந்துகள் நேற்று மாலை முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தேர்தலில் போட்டியிடும் ஆறு வேட்பாளர்களும் அமைதி பேணும்படி கூட்டறிக்கை மூலம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் —

முக்கிய இரு கட்சிகளின

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா வென்றதும் உடன் பேச்சு ஆரம்பம்!

கொழும்பு, நவ. 8

நாளை புதன்கிழமை நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்கா வெற்றியீட்டியதும் விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தையை விரைவில் மீள ஆரம்பிக்க முடியும் என்று அரசப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இத்தகவலை வெளித்தால் சிங்களச் சேவை வெளியிட்டது.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசு கங்கணம் கட்டியுள்ளது என்றும் தமது பெயரை வெளியிட விரும்பாத அந்த அரசப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா, சிறிமா இருவரும் வெற்றியில் முழு நம்பிக்கை

கொழும்பு, நவ. 8

நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் தாங்கள் வெற்றி பெறுவது உறுதி என பொ. ஐ. மு. வேட்பாளர் பிரதமர் சந்திரிகாவும், ஐ. தே. க. வேட்பாளர் சிறிமா திஸாநாயக்காவும் உறுதிபட நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்கள்.

தனது வெற்றி ஒரு சாதனையாக அமையப்போகின்றது என்று தெரிவித்துள்ள சந்திரிகா குமாரதுங்கா —

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவும், ஊழலற்ற — அமைதியான — நிம்மதியிக்க — ஒன்றுபட்ட ஜனநாயக நாட்டைக் கட்டி எழுப்பவும் இந்த வெற்றி தமக்குஉதவும் என்றும் கூறியுள்ளார்.

நாட்டில் சகல இனத்தவர்களுக்கும் நியாயம் கிடைக்கும் விதத்தில் புதிய சமுதாயத்தை உருவாக்கி, ஸ்ரீலங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா அரசின் இரண்டரை மாத ஆட்சியில் 64 வீதமானோர் திருப்தி

### ‘சண்டே ரைம்ஸ்’ கருத்துக்கணிப்பு

கொழும்பு, நவ. 8

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு கடந்த இரண்டரை மாதங்களாக ஆட்சி நடத்திய விதம் குறித்து 64 சதவீதமானோர் திருப்தி தெரிவித்துள்ளனர்.

‘சண்டே ரைம்ஸ்’ நிறுவனம் ‘இன்ரநேஷனல்ரிசேர்ச்’ அமைப்புடன் இணைந்து நடத்திய கருத்துக் கணிப்பில் இது தெரிய வந்துள்ளது. 22.9 சதவீதமானோர் பொ. ஐ. மு. அரசின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர்; 13.1 சதவீதமானோர் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

லஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் குறித்து பொ. ஐ. மு. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் 66.2 சதவீதமானோரைத் திருப்திப்படுத்தியுள்ளது; 19.2 சதவீதமானோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். — இவ்வாறு அந்த கணிப்பு கூறியுள்ளது.

## 50 சதவீதத்துக்கு அதிக வாக்குகள் சந்திரிகாவுக்கே என்கிறது “ஐலண்ட்”

### கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு பாதிப்பாம்

கொழும்பு, நவ. 8

ஜனாதிபதித் தேர்தலில் முதல் சுற்றிலேயே 50 சதவீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகும் வாய்ப்பு பொ. ஐ. மு. வேட்பாளரான பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கே இருப்பதாக ‘‘சண்டே ஐலண்ட்’’ தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடும் திருமதி. சிறிமா திஸாநாயக்காவுக்கு ஆதரவாக பாரிய அனுதாப அலை வீசுமானால் மட்டுமே சந்திரிகாவின் வெற்றி வாய்ப்புப்பாதிக்கப்படலாம் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் பொ. ஐ. முன்னணிக்கு 48.94 சதவீத வாக்குகள் கிடைத்தன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 44.04 சதவீத வாக்குகள் கிடைத்தன.

நாளை மறுநாள் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு கணிசமான அளவு சிறுபான்மை இன மக்களின் வாக்குகள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு, கொழும்பு மற்றும் வடக்குப் பகுதிகளைச்சேர்ந்த 3 லட்சம் தமிழர்களின் வாக்குகளும் 3 லட்சம் முஸ்லிம்களின் வாக்குகளும் மலையகத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பத்து லட்சம் பெரும்பான்மையுடன் சந்திரிகா அமோக வெற்றியீட்டுவார்

### ‘‘ராவய’’வின் கணிப்பு

கொழும்பு, நவ. 8

நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் மிக இலகுவாக வெற்றி பெறுவார். அவர் பத்து லட்சத்துக்கு மேல் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவார்.

இப்படி ‘‘ராவய’’ சிங்கள வார இதழின் ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்புக் குழு மதிப்பிட்டுள்ளது.

காமினி திஸாநாயக்கா உட்பட ஐ. தே. க. தலைவர்கள் கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மரணமடைந்ததை அடுத்து ஐ. தே. கட்சிக்கான ஆதரவில் அதிகரிப்பு ஏற்பட்ட போதும் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமா திஸாநாயக்கா நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக் கட்சியில் ஏற்பட்ட பிளவு காரணமாக ஐ. தே. கவின் பலம் பெரிதும் சிதைவுற்றது.

ரணில் விக்கிரமசிங்கா உட்பட்ட காமினி எதிர்ப்புக்குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா புதிய ஜனாதிபதியானால் பிரதமர் பதவி யாருக்கு?

### கட்சிக்குள் இழுபறி

கொழும்பு, நவ. 8

சந்திரிகா குமாரதுங்கா நாளை மறுநாள் நடைபெறும் தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில்—

புதிய பிரதமராக யார் நியமிக்கப்படுவார் என்பது குறித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இழுபறி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர்களான ரத்னசிறி விக்கிரமநாயக்கா, தர்மசிறி சேனநாயக்கா, கேணல் அனுருத்த ரத்வத்தை மற்றும் சி. வி. குணரத்ன ஆகியோரின் பெயர்கள் பிரதமர் பதவிக்கு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

போட்டி ஏற்படுமானால் தான் அதிலிருந்து விலகத் தயாரென ரத்னசிறி விக்கிரமநாயக்கா அறிவித்துள்ளார். தர்மசிறி சேனநாயக்காவுக்குத்தான் பிரதமராகும் வாய்ப்பு பிரகாசமாக இருப்பதாக கூறப்படுகின்றது.

என்றாலும்— எதிர்வரும் ஜூலையில் புதிய அரசமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்காவே இருக்க வேண்டும் என்று ஒருசாரார் வற்புறுத்த ஆரம்பித்துள்ளனராம்.

புதிய அரசமைப்பில் இ...

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முர்சந்தி முரளி



அவையளுக்கு கப்பலைப் பற்றி என்ன கவலை? கொமிஷனைப் பற்றித்தானே கவலை...!

## ஆயிரத்து நூறு முறைப்பாடுகள்

கொழும்பு, நவ. 8

ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட நாள் முதல் நேற்று வரை தேர்தல் சம்பந்தமாக ஆயிரத்து 112 வன்செயல் முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் பொ.ஐ.மு. 520 முறைப்பாடுகளையும் ஐ.தே.க. 537 முறைப்பாடுகளையும் செய்துள்ளன.

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், நவ. 8

கிளாலி – பூநகரி படகுச் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## பிரதமரை அவதூறு செய்யும் பிரசுரம்: சிறிமா வீட்டில் தேடிய பொலீஸார்!

கொழும்பு, நவ. 8

பொ. ஐ. முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரான பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவை அவதூறு செய்யும் பிரசுரங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் ஐ. தே. கவின் ஜனாதிபதி வேட்பாளரான சிறிமா திஸாநாயக்காவின் வீட்டில் பொலீஸார் தேடுதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு சிறிமா திஸாநாயக்கா கூட்டம் ஒன்றில் பங்குபற்ற வெளியே சென்றிருந்த போது — வீட்டில் இருந்த ஏனைய குடும்பத்தவர்கள் கொழும்பு ஹைட்பார்க் கூட்டத்துக்குச் சென்றிருந்த சமயம் — இந்தத் தேடுதல் இடம்பெற்ற

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கடற்புலிகளின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாதவை:

## பயனற்ற 2 பெரிய ரஷ்ய கப்பல்கள் ஸ்ரீலங்கா கடற்படைக்கு கொள்வனவு!

### இராணுவ அதிகாரிகள் ஆச்சரியம்

கொழும்பு, நவ. 8

ரஷ்யாவில் இருந்து புதிதா வாங்கப்படவுள்ள இரு கப்பல்களும் ஐந்து வாரங்களுக்கு முன்பு கற்பிட்டிக் கடலில் விடுதலைப் புலிகளினால் மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா கடற்படைக் கப்பலிலும் பார்க்கப் பெரியவை என்று தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல்கள் இரண்டும் 73 கோடி 50 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்படுகின்றன என்று ‘‘சண்டே ரைம்ஸ்’’ தகவல் வெளியிட்டுள்ளது.

கடற்புலிகளின் நடமாட்டம் அதிகமாக உள்ள — ஆழமற்ற — கடற்பரப்பில் பெரிய கடற்படைக் கப்பல்களைப் பயன்படுத்துவது முட்டாள்தனமானது என்பதை ‘‘சாகரவர்த்தனா’’ மீதான தாக்குதல் நிரூபித்துள்ளது என்று இராணுவ பகுப்பாய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். பெரிய கப்பல்களில் எவ்வளவு கனரக சக்தி வாய்ந்த ஆயுதங்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வியாழனன்று ரணில் ஐ.தே.க தலைவராவார்

கொழும்பு, நவ. 8

எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும்—

அடுத்தநாள் வியாழக்கிழமை ஸ்ரீகோத்தாவில் ஐ. தே. கவின் தலைமைப் பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது ஐ. தே. கவின் தலைவராக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும்—

ஜனாதிபதிப் பதவியிலிருந்தும் தீவிர அரசியலிலிருந்தும் கட்சி நடவடிக்கைகளிலிருந்தும் அவர் ஒதுங்கிக் கொள்வார் என எதிர்பார்க்கப்படு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிமா தோல்வியுற்றால் மீள ஜ.ஐ.தே.முவில்?

கொழும்பு, நவ. 8

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர் சிறிமா திஸாநாயக்கா தோற்கும் பட்சத்தில் அவரின் அரசியல் எதிர்காலம் எப்படி அமையும் என்பது ஸ்ரீகோத்தாவில் நடந்த ஒரு கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்பில் மறைந்த வேட்பாளர் காமினியின் விசுவாசிகளே கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலின் பின்னர் சிறிமாவின் அரசியல் எதிர்காலம் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் தான் இருக்கும் என்று ஸ்ரீகோத்தா வட்டாரங்கள் தெரிவித்தன

## நாட்டை விட்டு வெளியேற வீரசூரியாவுக்குத் தடை?

கொழும்பு, நவ 8

காமினி திஸாநாயக்காவின் மைத்துனரான டாக்டர் விக்கிரம வீரசூரியாவை நாட்டை விட்டு வெளியேறக் கூடாது என [illegible] பொலிஸார் உத்தரவிட்டிருப்பதாக [illegible] செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் அரச உயர் அதிகாரிகளின் முறையற்ற நடவடிக்கைகள் மற்றும் சில திணைக்களங்களில் பணியாற்றிய இளம் பெண்களை நிர்வாண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 3 புத்தம் புதிய ஹெலிகள் இரு வாரங்களில் வரும்!

கொழும்பு, நவ. 8

அடுத்த இரண்டு வாரங்களில் மூன்று புத்தம் புதிய ‘‘எம். ஐ. 17 — IV’’ ரக ஹெலிக்கொப்டர்கள் ரஷ்யாவில் இருந்து கொழும்பு வந்து சேரவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரச்சினைக்குரிய ரஷ்ய ஆயுதக் கொள்வனவு உடன்படிக்கைக்குப் புறம்பாக — பல மாதங்களுக்கு முன்னரே — இந்த ஹெலிக்கொப்டர்கள் கொள்வனவு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இராணுவத்திடம் உள்ள மூன்று ‘‘எம். ஐ. 17’’ ரக போக்குவரத்து ஹெலிக்கொப்டர்கள் திருத்தப்படவுள்ளன: இவை இரண்டு வருடங்களுக்கு முன்பு ரஷ்யாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. இவை திருத்தப்பட்டு மீண்டும் சேவைக்கு விடப்படும் வரை, புதிய ஹெலிக்கொப்டர்களே துருப்புக்களை ஏற்றிஇறக்கவும் மற்றும் யுத்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படவும் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-ா)

## ரஷ்ய ஆயுதக் கொள்வனவு ஓர் அரசியல் சூதாட்டமாம்!

கொழும்பு, நவ 8

ரஷ்ய ஆயுதக் கொள்வனவு விவகாரத்தை வைத்து அரசியல் சூதாட்டம் ஒன்று இடம்பெறுவதாக ‘‘சண்டே ரைம்ஸ்’’ ஆங்கில வார இதழின் இராணுவப் பகுப்பாய்வாளர் தெரிவித்திருக்கிறார்.

பொ.ஐ.மு. அரசு பதவிக்கு வந்ததும் 350 கோடி ரூபா பெறும் ரஷ்ய ஆயுதக் கொள்வனவு ஒரு மோசடி என்று கண்டுபிடித்ததுடன் —

அது தொடர்பான உடன்படிக்கையை இடைநிறுத்தி வைத்தது.

சிங்கப்பூரில் உள்ளதாகக் கூறப்படும் போலி நிறுவனம் ஒன்றினூடாக ரஷ்ய ஆயுத நிறுவனம் ஒன்றிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய இந்த உடன்படிக்கை இடமளித்தது.

இந்த உடன்படிக்கையில், ஜனாதிபதி விஜேதுங்காவுக்குத் தெரிந்தே பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

3 மாதம் நிரம்பிய அல்சேஷன் ஆண், பொமனேரியன் பெண் நாய்க் குட்டிகளும், சில்க்கி, பாபடிகல்ஸ், பொலிஸ், சில்வர் பாமாஸ் கோழி முட்டைகளும் 2வாரக் குஞ்சுகளும் விற்பனைக்கு உண்டு. இல. 1 அறவாணர் வீதி, மடத்தடி (தூபி அருகில்) சங்கத்தானை, சாவகச்சேரி.

(8005)

## பெயர் மாற்றம்

மல்லாவி யோகபுரத்தை சேர்ந்த செல்வன் பூராசா கந்தையா ஆகிய நான் 01-08-94இல் இருந்து எனது பெயரை

**பூராசா தினேஸ்**

என்று மாற்றியுள்ளதை சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

- பூ. தினேஸ்.

[33681]

தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்
மருதனார்மடம் கல்விக்கோட்டம்

## பொதுச்சபைக் கூட்டம்

இடம்: யா/இணுவில் இந்துக்கல்லூரி

காலம்: 09 - 11 - 1994 புதன் மாலை 3மணி

விடயம்:
1. மாவீரர் நிகழ்வுகளின் கலந்துரையாடல்
2. செயலாளர் ஆண்டறிக்கை வாசித்தல்
3. பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பித்தல்
4. புதிய நிர்வாகசபை அங்கத்தவர்கள் தெரிவு
5. பிற விடயங்கள்

★ தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களையும், பிரத்தியேக வகுப்பு நடத்தும் ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

[7698]

## C. I. M. A.

**Chartered Institute of Management Accountants**
(LONDON)
**STAGE - 1**
**NEW SYLLABUS**
**MAY – 1995**

## I. A. B.

**International Association of Book-Keepers**
(LONDON)
**FOUNDATION**
**INTERMEDIATE**
**JUNE = 1995**

★ புதிய பிரிவுகள் இப்பொழுதுதான் ஆரம்பமாகின
★ அனுமதிகள் இப்பொழுதும் வழங்கப்படுகின்றன
★ மூத்த விரிவுரையாளர்கள்
★ குறைந்த கட்டணம்
★ சிறந்த பெறுபேறுகள்

உறுதியான கல்வியைப் பெற

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3ஆவது குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-9593]


## 31ஆம் நாள்
## நினைவு அலைகள்

மலர்வு: 03 — 07 — 1937



உதிர்வு: 09 — 10 — 1994

### திருமதி இராசையா மரியம்மா (பொன்மணி)

அன்பின் குலவிளக்காய், அன்னையாய், பண்பிலே தெய்வமாய், வழிகாட்டலில் நல்லாசிரியையாய் எம்மை வாழவைத்த தாயே! உமது பிரிவினால் நாம் ஆறாத் துயர் அடைகின்றோம்.

அன்னாரின் இறுதிச் சடங்கிலும், செலவிலும் கலந்தும், எமக்கு அனுதாபம் தெரிவித்தும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக இன்று (08 - 11 - 94) செவ்வாய்க்கிழமை காலை 6-30 மணிக்கு கிறிஸ்து அரசர் தேவாலயத்தில் இரங்கற் பாடல் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படும். அத்துடன் வீட்டில் நடைபெறும் செபவழிபாட்டிலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அன்ரன் இல்லம்,
28/1, புதுவீதி,
கொய்யாத் தோட்டம்.

[33664]

# 9ஆம் திகதிக்கு முன்னர் ஹேமாவை எம்.பி. ஆக்கும்படி சிறிமா கோரிக்கை

## ஜனாதிபதி டி. பிக்கு சிறிமா கடிதம்

கொழும்பு, நவ. 8

''ஜனாதிபதித் தேர்தல் தினமான 9ஆம் திகதிக்கு முன் ஹேமா பிரேமதாஸாவை ஐ.தே.க. தேசிய பட்டியல் எம்.பியாக நியமியுங்கள்''

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் திருமதி சிறிமா திஸாநாயக்கா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

''தேசியப் பட்டியலில் முதலில் ஏற்படும் வெற்றிடத்துக்கு ஹேமா எம். பியாக நியமிக்கப்படுவார். ஹேமாவும் சஜித்தும் ஐ.தே.க. நிறைவேற்றுக் குழுவில் முதலில் காலியாகும் இடங்களுக்கு நியமிக்கப்படுவர். — இந்த உறுதிமொழிகளை கொல்லப்படுவதற்கு முன் காமினி, ஹேமாவுக்கு வழங்கியிருந்தார். இப்படி உறுதிமொழிகள் வழங்கப்பட்டது ஜனாதிபதியான உங்களுக்கும் தெரியும் என்று காமினி என்னிடமும் தெரிவித்திருந்தார்.

இவ்வுறுதிமொழிகள் பற்றி காமினி உங்களுடன் கலந்துரையாடும் போது மறைந்த முன்னாள் ஐ.தே.க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா மற்றும் தஹம் விமலசேன ஆகியோரும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

ஆகவே இந்த உறுதிமொழிகளை ஜனாதிபதித் தேர்தல் தினத்துக்கு முன்பதாக நிறைவேற்றுங்கள்.''—

இப்படி சிறிமா தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

(இ-எ)

# ஹேமாவை எம்.பியாக நியமிக்கும் கோரிக்கையை டி.பி. ஏற்கவில்லை

ஹேமா பிரேமதாஸாவை ஐ.தே.க. தேசியப்பட்டியல் எம்.பியாக நியமிக்க ஜனாதிபதி விஜேதுங்கா மறுத்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதவி விலகும் கடைசிக் கட்டத்தில் பிரச்சினைக்குள் மாட்டிக்கொள்ள அவர் விரும்பாததே இதற்குக் காரணம் என்று 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

ஐ.தே.க. தேசியப் பட்டியலில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு புதிய எம். பிக்களை நியமிப்பது, ஐ.தே.க, நிறைவேற்றுக் குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு புதியவர்களை நியமிப்பது ஆகியவற்றை ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஐ.தே.கவைப் பாரமெடுக்கும் புதிய தலைமைத்துவத்திடம் ஒப்படைப்பது என்று விஜேதுங்கா தீர்மானித்து விட்டார் என்று சொல்லப்படுகிறது.

விஜேதுங்கா வியாழன் ஓய்வு பெறுவதை அடுத்து ஐ.தே.கவின் புதிய தலைவராக ரணில் விக்கிரமசிங்கா நியமிக்கப்படவிருக்கின்றார்.

அவரே இனி புதிய எம். பிக்கள் யார் என்பதை தீர்மானிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# தொண்டாவுக்கு பதவிப்பிரமாணம்: டி.பிக்கு கட்சிக்குள் எதிர்ப்பு இருந்தது

கொழும்பு, நவ. 8

தொண்டமானை அமைச்சராக பதவிப் பிரமாணஞ் செய்து வைக்க வேண்டாம் என்று ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு ஆலோசனை கூறப்பட்டது என்றும் —

ஓய்வு பெறும் சமயத்தில் ஏன் வீண் பிரச்சினைக்குள் மாட்டிக் கொள்ள வேண்டும் என்று கூறி அவர் அந்த ஆலோசனையை நிராகரித்து விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதவிப்பிரமாணம் செய்வதற்கு முன்பு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை தொண்டமான் சந்தித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் தாம் சேர முடிவு செய்து விட்டதாகத் தெரிவித்தார்.

தொண்டமானின் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் இ.தொ.காவின் உயர் தலைவர்கள் அனைவரும் பங்குபற்றினர்.

நுவரெலியா மாவட்டத்தில் இரண்டாவது எம். பியாக தெரிவு செய்யப்பட்ட திரு. சதாசிவம் மட்டுமே கலந்து கொள்ளவில்லை. சதாசிவம் காமினி விசுவாசி ஆவார்.

(இ-எ)

# கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட விதைநெல் பெருமளவு தேக்கம்

யாழ்ப்பாணம் நவ 8

பெரும்போக நெற்செய்கைக்காக கொழும்பில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட விதைநெல் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தில் தேங்கிக் கிடக்கின்றது.

காலம் பிந்தி வந்ததினாலேயே விதை நெல் சந்தைப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக சமாச தலைவர் எஸ். செல்வரத்தினம் கூறினார்.

எனினும் சில வயல்களில் வெள்ளத்தினால் நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்றும்—

பாதிக்கப்பட்ட வயல்களில் மீண்டும் நெற்செய்கை மேற்கொள்ளவேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது என்றும்—

விதை நெல் தேவைப்படும் விவசாயிகள் சமாசத்தில் தொடர்பு கொண்டு விதை நெல்லை பெற்றுக்கொள்ளலாம் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார்.

(இ- 17)

## பரிசளிப்பு வைபவம்

யாழ். பிரதேச செயலகம் சூழல் தினத்தை முன்னிட்டு நடத்திய கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் நாளை புதன் கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

# ஓய்வுபெறும் விஜேதுங்கா தங்குவதற்கு வசதியானவீடு

கொழும்பு, நவ, 8

நாளை மறுநாள் ஜனாதிபதி பதவியில் இருந்து ஓய்வு பெறும் திரு. டி. பி. விஜேதுங்கா தனது ஓய்வுக் காலத்தை கொழும்பு, விஜேராம வீதியில் உள்ள வீடு ஒன்றில் கழிப்பார்.

இதற்கான வசதியான வீடு தெரிவு செய்யப்பட்டு விட்டது.

இப்போது அதற்கு புது மெருகூட்டும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

நான்காவது நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் நாளை நடைபெறும். புதிய ஜனாதிபதி யார் என்பது நாளை மறுநாள் நண்பகல் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டு விடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## தபால்களை சேர்ப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.. 8

பருத்தித்துறையில் இருந்து நாளை கொழும்பு திரும்பவிருக்கும் 'கோமாரி' கப்பலில் தபால் பொதிகள் எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடா நாட்டில் உள்ள சகல தபாலகங்களிலும் இன்று காலை 10 மணிக்கு முன்பாகவும் —

யாழ். பிரதம தபாலகத்தில் உள்ள பெட்டியில் இன்று மாலை 4 மணிக்கு முன்பாகவும் — தமது தபால்களை சேர்க்குமாறு யாழ். தபாலக பிரதம தபாலதிபர் திரு. சு. கோமலீஸ்வரன் கேட்டுள்ளார்.

(இ-3)

# மக்கள் வங்கிக்கு 18 எழுதுவினைஞர்கள்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். மாவட்ட மக்கள் வங்கிக்கிளைகளுக்கு 18எழுதுவினைஞர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வங்கிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடந்த போட்டிப் பரீட்சையில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை புதன்கிழமை காலை 8-30 மணிக்கு மக்கள் வங்கி யாழ். பிராந்திய அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவிருக்கிறது. (இ-3)

## பரோபகாரி சின்னையா காலமானார்

யாழ்ப்பாணம், நவ. 8

மலேசியா, ஈப்போவில் வாழ்ந்து தமிழ், சைவப் பணியாற்றியவரும் ஈழத்தில் பல நிறுவனங்களுக்கும், தர்ம கைங்கரியங்களுக்கும் தாராளமாக நிதி உதவிய பரோபகாரியுமான சி. சின்னையா கடந்த வாரம் அங்கு காலமானார்.

உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் 75 வருடங்களுக்கு மேல் ஈப்போவில் வாழ்ந்து அங்கு பல தொண்டுகளைச் செய்தார்.

திருநெல்வேலி சைவச்சிறுவர் நிலையம், கைதடி சிறுவர்இல்லம், உரும்பிராய் திருஞானசம்பந்தர் இல்லம் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம், கொழும்பு இராமகிருஷ்ண நிலையம் ஆகியன உட்பட பல தர்ம [illegible]ங்களுக்கு இவர் பெருந்தொகைப் பணத்தை தாரி வழங்கியிருந்தார்.

(அ-)

# ஒரு தூதர் மட்டுமே நாடு திரும்பினார்

## ஏனையோருக்கு அவகாசம்

கொழும்பு, நவ. 8

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசினால் நாடு திரும்பும்படி உத்தரவிடப்பட்டபத்துக்கு அதிகமான இலங்கைத் தூதர்களில் ஒருவர் மட்டுமே கு[illegible] காலக்கெடுவுக்குள் கொழும்பு திரும்பினார் என்று அறிவிக்கப்படுகிறது.

சென்ற 31 ஆம் திகதியுடன் இக்காலக்கெடு முடிவடைந்து விட்டது.

எனினும் நாடு திரும்பத் தவறிய தூதர்களுக்கு இம் மாதம் 15 ஆம் திகதி வரை [illegible] கப்பட்டுள்ளது என வெளி[illegible] தெரிவித்தன. (இ-எ)

# தேர்தலைக் கண்காணிக்கும் சர்வதேச அவதானிகள்

## மாவட்டங்களில் சுற்றுப்பயணம்

கொழும்பு, நவ. 8

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க உள்ள சர்வதேச அவதானிகள் இன்றும் நாளையும் மாவட்டங்களில் சுற்றுப் பயணங்களை மேற்கொள்வார்கள்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் ஆகிய நாடுகளிலிருந்தும் ஜெனிவாவில் உள்ள சர்வதேச நடுவர் மன்றத்திலிருந்தும் 32 அவதானிகள் வந்துள்ளனர்.

(க)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ.8

இன்று நடைபெறவிருந்த வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் வாராந்த மாநாடு நாளை புதன்கிழமை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், நவ.8

புத்தூர், நவக்கிரி நிலாவரை கிணற்றின் கட்டில் காணப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் காவல்துறையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க அந்த இளைஞர் நீல நிறக் கோடிட்ட சாரமும் கருநீல நிற சேட்டும் அணிந்திருக்கக் காணப்பட்டார்.

சடலத்தின் மூக்கில் இருந்து இரத்தம் கசிந்திருந்தது.

(ஐ-15)

## இவ்வாரம் 'பிளாம்பயாள்' சேவை ரத்து

யாழ்ப்பாணம், நவ. 8

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் ''பிளாம்பயான்'' கப்பல் இவ்வாரம் நோயாளர் சேவையில் ஈடுபடாது எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரதி வியாழக்கிழமை தோறும் நோயாளர்களை ஏற்றிச் செல்லும் பணியில் ஈடுபடும் இக்கப்பல் ஜனாதிபதி தேர்தலையொட்டி இவ்வாரம் சேவையில் ஈடுபடாது என்றும்—

யாழ்ப்பாணம் வந்துள்ள தொண்டர் அமைப்பு பிரதிநிதிகளை ஏற்றிச் செல்ல இக்கப்பல் இன்று பருத்தித் துறைக்கு வரும் என்றும்— தெரிவிக்கப்பட்டது. (இ-4)


## தவறிவிட்டது

01-11-1994 அதிகாலை 3.00 மணிக்கும் 5.00 மணிக்கும் இடையில் கிளாலியில் இருந்து யாழ்ப்பாணம் வரும்வழியில் கைதடிக்கும் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் வீதிக்கும் இடையில் சிவப்பு பச்சை நிறம் கொண்ட பெரிய கறுப்பு நிறம் கொண்ட பையும் (Bag), கல்யாண புகைப்படங்கள் கொண்ட அல்பம் இரண்டும், பெண்கள் சேலைகள் மற்றும் சிலபொருள்கள் அடங்கிய பையும்(Bag) தவறிவிட்டன. இவைகளை யாராவது கண்டெடுத்தால் உடன் ஸ்பெஷல் என்ஜினியர்ஸ், 36, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும்.

உரிமையாளர்,
ஸ்பெஷல் என்ஜினியர்ஸ்.

(33686)

சாவகச்சேரி நுணாவில் வாரிவனேஸ்வரம்
அருள்தரு அமிர்தபாஷினி அம்பிகா சமேத
**வாரிவனநாதசுவாமி**
## தேவஸ்தானம்

தெட்சணா மூர்த்தி சுவாமி பிரதிஷ்டை கும்பாபிஷேகம்.

**7-11-94** திங்கள் மாலை 6 மணி கிரியை ஆரம்பம்.

**8-11-94** செவ்வாய் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை பக்தர்கள் எண்ணைக் காப்பு சாத்துதல்.

**9-11-94** புதன் காலை 6.30 மணி முதல் கிரியை ஆரம்பம். காலை 7.45 மணி முதல் 8.10 மணி வரை உள்ள மகரலக்கின சுபவேளையில் மகா கும்பாபிஷேகம். வியாழ சுகம் இல்லாதவர்கள் அவசியம் பங்குபற்றல் நலம்.

அமரர் இராசரத்தினம் குடும்பம் (கொட்டடி) விழா உபயகாரர்.

அன்பளிப்பு:-
**ரவி - ராசி பட்டுச் சோலை**
70, நவீன சந்தை. யாழ்ப்பாணம்.

(33685)

## சோதிடம்

கடலங்குடி சோதிட சாஸ்திர ஆராய்ச்சி கல்லூரியில் விசேட பயிற்சி பெற்றவரும்; தமிழ்நாட்டு சோதிட மேதை டாக்டர் பார்த்தசாரதி அவர்களின் மாணவியுமான செல்வி ஜெ. தில்லையம்பலம் அவர்களிடம் சோதிடக் குறிப்புகள், திருமணப் பொருத்தங்கள், ஆயாதி பொருத்தம், மூர்த்தி நிர்ணயம் என்பனவற்றில் நற்பலன் அறிந்து உங்கள் வாழ்வை முன்னேற்ற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**135, பருத்தித்துறை வீதி,**
(நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்பாக),
**நல்லூர்.**

[33662]

யாழ். வணிகர் கழகம்
விடுக்கும்
## முக்கிய அறிவித்தல்

எமது வணிகர் கழக எல்லைக்குட்பட்ட சகல வணிக நிலைய உரிமையாளர்களுக்கும் 09-11-1994 புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஓர் விசேட கலந்துரையாடல் நடைபெறவுள்ளதால் சகல வணிகநிலைய உரிமையாளர்களும் தவறாது நேரில் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

பொதுச் செயலாளர்,
யாழ். வணிகர் கழகம்.

[சி-9613]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## நல்ல சமிக்ஞை

வடக்கு-கிழக்குப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதையே மக்களில் 66 சதவீதமானோர் விரும்புகின்றனர்.

கொழும்பு ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகை ''இன்ரநாஷனல் ரிசேர்ச் பிறைவேற்'' நிறுவனத்துடன் இணைந்து நடத்திய, ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமான கருத்துக் கணிக்கும் மதிப்பீடு ஒன்றில் இருந்தே, இந்த விவரம் பெறப்பட்டிருக்கிறது. இந்த மதிப்பீட்டை முழுக்க முழுக்கச் சரியானது என்று எடுத்துக்கொள்ள முடியாவிடினும், வடக்கு - கிழக்கில் நடக்கும் போர் சம்பந்தமாகத் தெற்கில் உள்ள மக்களின் மனப்போக்கைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளலாம்; அடையாளமாகக் கருதலாம்.

வடக்கு-கிழக்குப் போரை முடிவுக்குக்கொண்டு வருவது என்பது தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பது என்பதே ஆகும்.

தமிழர் பிரச்சினைக்கு — இனப்பிரச்சினைக்கு — இராணுவத் தீர்வு உகந்ததல்ல என்பதைச் சிங்களப் பொது மக்கள் ஏற்கனவே உணர்ந்திருக்கிறார்கள். அதன் விளைவாகவே ஓகஸ்ட் பொதுத் தேர்தலில் இராணுவத் தீர்வை நாடிய ஐக்கிய தேசியக் கட்சி அரசைத் தோற்கடித்து சந்திரிகாவின் அரசை ஆட்சியில் அமர்த்தினார்கள். இப்போது சிங்கள மக்களின் அந்த நிலைப்பாடு மேலும் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.

கடந்த பதினேழு வருடங்களாகத் தொடர்ந்து ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசுகள் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண வேண்டும் என்பதனையே தமது நிலைப்பாடாகக் கொண்டிருந்தன. கட்சியின் தலைமைத்துவத்தில் உள்ளவர்களின் இந்த நிலைப்பாடே சிங்கள மக்களின் நிலைப்பாடு என்றும், விருப்பம் என்றும் அந்த அரசுகள் காட்டிக் கொண்டன.

ஓகஸ்ட் பொதுத் தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சியின் பொய்மையை வெளிக்காட்டியது. வடக்கு - கிழக்குப் பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை அல்ல; அது இனப்பிரச்சினையே; அந்தப் பிரச்சினையை அரசியல் தீர்வு ஒன்றின் மூலமே முடிவுக்குக் கொண்டுவர முடியும், கொண்டுவர வேண்டும் என்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் நிலைப்பாட்டை சிங்கள மக்களில் கூடுதலானோர் ஏற்றுக் கொண்டனர்.

எனினும் பொதுத்தேர்தல் வாக்களிப்பு, சிங்கள மக்களிடையே ஏற்பட்ட மாற்றம் உறுதியானதாக இல்லையோ என்ற ஒரு சந்தேகத்தை உண்டாக்கியது. பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த பெரும்பான்மை ஒரு நூலிடையாகவே இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியைவிட 4.9 சதவீதமான வாக்குகள் மட்டுமே பொ. ஐ. முன்னணிக்குக் கூடுதலாகக் கிடைத்தன. அது சந்தேகத்துக்குக் காரணமுமாகியது.

ஆனால் மேற்கூறப்பட்ட கருத்துக் கணிப்பு மதிப்பீடு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் சிங்கள மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்; மிகப் பெரும்பான்மையானோர் அதனையே ஆதரிக்கிறார்கள் என்பதனை சந்தேகத்துக்கு இடமின்றி இப்போது எடுத்துச் சொல்கிறது.

நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதமர் சந்திரிகாவும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற நிலைப்பாட்டையே இறுகப் பற்றிக்கொண்டுள்ளார். அதனால், அவருக்குச் சிங்கள மக்கள் தமது அமோக ஆதரவை தங்கள் வாக்குகள் மூலம் வழங்கி, தமது உறுதிப்பாட்டை இம்முறை சந்தேகத்துக்கு இடமின்றி எடுத்துக் காட்டுவர் என நம்பலாம். அதாவது சந்திரிகாவே புதிய ஜனாதிபதியாவார் என்பதும் தெளிவாகிறது.

மொத்தத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் என்ற நிலைப்பாடு இந்நாட்டின் எதிர்காலம் பிரகாசத்துடன் விடியும் என்பதற்கான நல்ல சமிக்ஞையாகும்.

# தட்டுப்பாடான உணவுப்பொருள்களை உடன் அனுப்பும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள சீனித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய, உடன் கூடுதல் அளவு சீனியை அனுப்புமாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு புனர்வாழ்வு அமைச்சைக் கோரியுள்ளது.

இது குறித்து யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அவசரச் செய்தி ஒன்றை கொழும்புக்கு அனுப்பியுள்ளார்.

அதே சமயம் இது போன்ற மற்றும் ஒரு செய்தியை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சுக்கு அனுப்பி உள்ளார்.

அச் செய்தியில் சீனி, மால்மா, பருப்பு போன்ற பொருள்களை உடன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர் மாநாடு நடைபெற்றது.

அம் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமையவே மேற்கண்ட உணவுப் பொருள்களை அனுப்பி வைக்குமாறு செய்தி அனுப்பப்பட்டது.

(இ-4-3)

## அகதி முகாம் மாணவருக்கு கட்டுரை, சித்திரப்போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இடம்பெயர்ந்தோர் முகாம்களிலுள்ள மாணவர்களிடையே சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

15 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களிடையே ஒவ்வொரு முகாம்களிலும் இப்போட்டிகள் நடத்தப்படும். இதில் முதல் 3 இடங்களைப்பெறும் மாணவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறும் இணையத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவின்போது பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(எ-4)

## தென்மராட்சிப் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

தென்மராட்சிப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் வேலைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும் என சாவகச்சேரி சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் தா. சிவபாதம் அறிவித்துள்ளார்.

இன்று 8 ஆம் திகதி மிருசுவில் பாரதி சனசமூக நிலையத்திலும்—

11 ஆம் திகதி நாவற்குழி கிராம சபை அலுவலகத்திலும்— நாவற்குழி மகாவித்தியாலயத்திலும்—

14 ஆம் திகதி கைதடி நவபுரம் சனசமூக நிலையத்திலும்— மந்துவில் சனசமூக நிலையத்திலும்—

15 ஆம் திகதி கிளாலி பாலர் பாடசாலையிலும்—

16 ஆம் திகதி மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்திலும்—

18 ஆம் திகதி வரணி வடக்கு கறுக்காய் சனசமூக நிலையத்திலும்—

22 ஆம் திகதி தர்மக்கேணி பாலர் பாடசாலையிலும்—

24 ஆம் திகதி மிருசுவில் கெற்பலி சனசமூக நிலையத்திலும்— விடத்தற் பளை சனசமூக நிலையத்திலும்—

25 ஆம் திகதி மீசாலை மதுவன் சனசமூக நிலையத்திலும்—

28 ஆம் திகதி நுணாவில் கலைமகள் சனசமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

(இ-117)

# தற்கொலையாளியான பெண் எங்கு தங்கினார்?

### துப்புத் துலங்கிவிடுமாம்

கொழும்பு, நவ. 8

கொழும்பு, கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மனித குண்டாக செயல்பட்ட பெண் கொழும்பு விடுதி ஒன்றில் தங்கிஇருந்தது பற்றிய முக்கிய தகவல்இரண்டொரு தினங்களில் வெளியாகலாம்.

கொழும்பு சிங்கள நாளிதழ் 'திவயின' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

## கடலிற்குள் இறுதிக் கிரியை

### கந்தபுராணக் காட்சிகள்

வேற்படை சீற்றத்துடன் மிக வேகமாகச் சென்று சூரபன்மனின் உடலை இரு கூறுகளாக்கி கடலில் எறிந்துவிட்டு, ஆகாய கங்கையில் மூழ்கி, அக்கினி வடிவத்தை மாற்றி, அனுக்கிரக வடிவு பெற்று மீண்டும் முருகப் பெருமானின் திருக்கரத்தில் அமர்ந்தது. கூறான உடலின் வலப்பாகம் மயிலாகவும், இடப்பாகம் சேவலாகவும் மாறிச் சண்முகப் பெருமானைச் சரணடைந்தன.

அவுணர்கள் சிலர் மகேந்திரபுரிக்கு ஓடிச் சென்று சூரபன்மன் இறந்த செய்தியை மனைவி பதுமகோமளைக்கும் ஏனைய இல்லக்கிழத்தியருக்கும் கூறினர். மணவாளன் இறந்தான் என்ற சொல் காதிற்பட்டதும் இடியேறுண்ட சர்ப்பம் போலப் பதுமகோமளை உயிர் நீத்தாள்.

சூரபன்மனுடைய இல்லக்கிழத்தியர் அழுது புலம்பி வயிற்றிலடித்துக் கொண்டு பெரிய தீக்குண்டம் அமைத்து இறந்த பதுமகோமளையின் உடலை அதில் இட்டுத் தாமும் வீழ்ந்து இறந்தனர். மங்கல நாணும், மாலையும் தீவாய்ப்பட்டு எரியும் அத்தருணம் இலக்குமிதேவியும் வீரமகேந்திர புரியை விட்டு நீங்கினள்.

முன்னர் வீரவாகுதேவருடன் போர் புரியப் பயந்து, கடலுள் புகுந்து மீனாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். சூரபன்மனின் கடைசி மகனான இரணியன், தன் தந்தை இறந்து சேவலும் மயிலுமாகிக் கந்தவேளைச் சரணடைந்ததை அறிந்த இரணியன் வானவெளியில் நின்று புலம்புவானாயினன்.

''தந்தையே அரிபிர மேந்திராதி தேவர்கள் வாழ்ந்த வளத்துடன் அரசிருந்த நீ இன்று சிவன் மைந்தன் தேரில் கோழியாய் நின்று கூவுகின்றனையோ? அண்டங்களில் உள்ளோர் அனைவரும் வணங்கித் தழும்பு பெற்ற பாதங்களை உடைய நீ இன்று வேற்கரனை மயிலாய் நின்று சுமக்கின்றனையோ? அரசனே! உனது பழைய வடிவையிழந்து வேறான பட்சி வடிவங் கொண்டாய். ஆதலால் நீ இறந்தாயில்லை. எனவே உனக்கு ஈமக்கிரியை செய்யும் பேறு கிடையாத நான் வீணாக என் உயிரைப் பாதுகாத்திருந்தேனே'' என்று பலவாறு புலம்பிய இரணியன் பூதர்கள் தன்னைக் கண்டால் கொன்று விடுவர் என அஞ்சி மீண்டும் கடலுள் புகுந்தான்.

கடலுள் புகுந்த இரணியன் மிகவும் வாட்டமடைந்து, அந்தக் கணமே தமது குருவாகிய சுக்கிராச் சாரியரிடம் சென்று இறந்த தந்தையருக்கும், சகோதரருக்கும், தாய்மாருக்கும், ஏனையோருக்கும் செய்ய வேண்டிய கடன்களை எல்லாம் விதிமுறைப்படி செய்தான்.

மூனாய்
அருணாசலம்

புக்க கனகன் புலர்ந்து புகரோன்பால்
அக் கணமே யெய்தி யழிவுற்ற தந்தையர்க்கும்
தக்க துணைவர்க்குந் தாயர்க்கும் ஏனையர்க்கும்
மிக்க கடன்களை விதிமுறையே செய்தான்
(கனகன் : இரணியன்; புகரோன் : சுக்கிரன்)
— இரணியன் புலம்புபடலம்

## புலிகளின் குரல் வானொலியில்

08 — 11 — 1994

செவ்வாய் இரவு

★ 8-01 மேஜர் பசீலன் நினைவாக சிறப்பு நிகழ்சசி — மலரன்னை எழுதிய ''முல்லையின் மைந்தன்''

★ 8-20 — நலந்தனா — நிகழ்ச்சியில் பிறக்கும் குழந்தைகளில் ஏற்படுகின்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்

★ 8 - 30 — செய்திகள்

★ 8-40— கருத்துக்களம்— இ. இராஜேஸ்வரன்எழுதிய ''தேவைகள்''

★ 8-50 — களமும் கானமும் எஸ். லாவண்யா எழுதிய ''வீரத்தின் விளை நிலங்கள்''

★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

09— 11 — 1994

புதன் காலை

★ 7 - 02 — மாவீர வணக்கம்.

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.

★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

★ 8-00 — மணிக்குகாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 8

அரியாலையில் உள்ள மணியரசன் [illegible]-ம் பெயர்ந்தோர் அகதி முகாம் குடிசைகள் இம்முறை வேயப்படாததால் மழை ஒழுக்கால் மக்கள் அவஸ்தைப்படுகின்றனர் என அறிய வருகிறது.

(க-17)

## மாவீரர் நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 8

சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், கோயில் நிர்வாகங்கள், வர்த்தக சங்க அங்கத்தவர்கள் மற்றும் பொது அமைப்பு அங்கத்தவர்களுடனான மாவீரர் நாள்தொடர்பான கலந்துரையாடல்கள் கோட்டவைரீதியாகபின்வரும்இடங்களில் நடைபெறும்.

★ பளைவட்டம்— நாளை 9 ஆம் திகதி பளை மகாவித்தியாலயத்தில்.

★ சாவகச்சேரி வட்டம் 10 ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில்.

### கிராம உத்தியோகத்தர்

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான மாவீரர் நினைவு நாள்பற்றிய கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி, பளை பிரதேச செயலகங்களைச்சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் 10 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும்.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், நவ. 8

கோப்பாய், உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று செவ்வாய் மாலை மூன்று மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்,

அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

(இ)

மழை காலத்தில்

# மாடுகளைப் பிடிக்கும் தொண்டையடைப்பான்

### தடுப்பூசி போட அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 8

பருவகால மழையுடன் மாடுகளைத் தாக்கும் தொண்டையடைப்பான் நோய்க்கெதிரான தடுப்பூசிகளை மாடுகளுக்கு தவறாது போட்டுக் கொள்ளும்படி சகல மாடு வளர்போருக்கும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திறந்த வெளிகளில் அவிழ்த்து விட்டு மேய்க்கும் மாடுகளுக்கு இந்நோய் வேகமாக பரவும் ஆபத்து இருப்பதாலும்—

இந்நோய் வந்தபின்பு மாடுகளை காப்பாற்றுவது கடினமாகையாலும் — பண்ணையாளர்கள் இதில் கூடிய கவனமெடுத்து அவ்வப்பகுதி கால்நடை வைத்தியர்களுடன் தொடர்பு கொண்டு கால்நடைகளை இந் நோயிலிருந்து காப்பாற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# தேர்தல் கடமையில் 60 ஆயிரம் பொலீஸார்!

கொழும்பு, நவ. 8

ஜனாதிபதித் தேர்தலையொட்டிய பணிகளில் அறுபதாயிரம் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப்பொலீஸ் மா அதிபர் இக்னேஷியஸ் கனகரத்தினம் இத்தகவலை வெளியிட்டார்.

இப்பொலீஸாரில் 17பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள், 319 பொலீஸ் அதிபர்கள், 172 பிரதம இன்ஸ்பெக்டர்கள், ஆயிரத்து 558 இன்ஸ்பெக்டர்கள், 2 ஆயிரத்து 580 சார்ஜண்ட்கள் அடங்குகின்றனர் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தேர்தல் பணிகளில் 400 பொலீஸார் ஈடுபடுவர். இவர்களில் 200பேர் யாழ்ப்பாணத்துக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

60 ஆயிரம் பொலீஸாரில் 50 ஆயிரம் பேர் வாக்களிப்பு நிலையங்களிலும் 10 ஆயிரம் பேர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொலீஸாருக்கு மேலதிகமாக தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் முப்படைகளும் ஈடுபடுத்தப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-எ-க)

## புதிய வகுப்பறைகள் திறப்பு

தென்மராட்சி, நவ. 7

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் ஒரு லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி கடந்த 24 ஆம் திகதி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கத்தால் திறந்து வைக்கப்பட்டது.

(க-117)

# 20 ஆம் நூற்றாண்டின் மாபெரும் ராணுவ தலைவர்களில் ஒருவர் பிரபா

20ஆம் நூற்றாண்டின் மாபெரும் இராணுவத் தலைவர்களில் ஒருவராக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் தம்மை நிலைநாட்டியுள்ளார்.

திரு. சுமந்திரா போஸ் எழுதிய கட்டுரை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எர்கா கார்டியனின் ஒக்ரோபர் 15ஆம் திகதி இதழில் இக்கட்டுரை ''ஈழப் போராட்டம்'' என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஈழம் என்ற சிந்தனை தமிழர்களின் மனதில் திடமாக வேரூன்றியுள்ளது.

அதிகபட்ச அதிகாரப் பகிர்வை வழங்கக் கூடியதாக இலங்கை அரசமைப்பை மாற்றி அமைப்பதன் மூலமே ஒதுங்கிச் செல்லும் தமிழ் மக்களுக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஓர் எதிர்காலம் உண்டு என்பதை உணர்த்த முடியும் — என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. சுமந்திரா போஸ் ''நாடுகள், தேசங்கள், இறைமை; ஸ்ரீலங்கா, இந்தியா, தமிழீழ இயக்கம்' என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

(இ-எ)

# அதிகாரப் பரவலுக்கு அத்திவாரம் அமைக்க வடக்கு-கிழக்கில் இடைக்கால சபை தேவை

### வாசுதேவ உதயனுக்கு பேட்டி

''வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அதிகாரங்களை பரவலாக்கவும், நிர்வாகத்தை மேற்கொள்ளவும் இடைக்கால சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அரசியல் தீர்வு காண்பதற்கான அத்திவாரமாக அது அமையும்.''

நவசமசமாஜக் கட்சித் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வாசுதேவ நாணயக்காரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு பம்பலப்பிட்டியில் உள்ள தமது அலுவலகத்தில் வைத்து உதயன் விசேட செய்தியாளருக்கு அவர் அளித்த பேட்டி வருமாறு:

#### இனப்பிரச்சினைக்கு முன்னுரிமை

கேள்வி: இனப்பிரச்சினை தீர்வுக்கு புதிய அரசு எடுக்கும் முயற்சி குறித்து கூற முடியுமா?

வாசு: இன்று நாட்டில் உள்ள தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முன்னுரிமை அளித்துள்ளது. இனவாதம் அற்ற நிலையில் அரசு இந்தப் பிரச்சினையை அணுகியுள்ளது.

வடக்கு-கிழக்கு மக்களின் அவசர தேவைகளை தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. நாளுக்கு நாள் அரசு இந்தப் பிரச்சினையை தீர்க்க ஏற்பாடுகளை செய்து வருகிறது.

#### இடைக்கால சபை

கேள்வி: இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு எடுக்கும் முயற்சி வெற்றி அளிக்கும் எனக் கருதுகிறீர்களா?

வாசு: இதற்கு [illegible] அடிப்படையிலான வேலைத் [illegible] அமுலாக்கல் போன்ற அனைத்து விடயங்களும் உடன் அமுல் செய்யப்படவேண்டும். இதை மேற்பார்வை செய்ய சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும். இந்தச் சபையில் தமிழ், முஸ்லிம், சிங்கள இனத்தவர்கள் இடம்பெற வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பி



னர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் இதில் இடம்பெறலாம்.

இந்தச்சபை வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அதிகாரங்களையும், அலுவல்களையும் கவனிக்கலாம்.

தமிழ், முஸ்லிம் மக்களிடையே இது நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் கொண்டுவரும். அத்துடன் சமாதான தீர்வுக்கு — நிரந்தர அரசியல் தீர்வுக்கு அத்திவாரமாகவும் அமையும்.

இச் சபை இயங்க ஆரம்பித்ததும், வடக்கு-கிழக்கில் நிர்வாகத்தை சீராக்க என்ன [illegible] திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும்.

தேவை ஏற்படும் பட்சத்தில் அரசமைப்பின் 13ஆவது விதிகளை நீக்கவும் அரசு தயாராகவிருக்க வேண்டும்.

தாமதமின்றி வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான அதிகாரங்கள், நிர்வாக அமைப்புக்களை அரசு வழங்க வேண்டும்.

பொலீஸ் அதிகாரங்கள் காணி சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்ட பின் அவற்றை அந்த சபை மேற்பார்வை செய்ய வேண்டும்.

விடுதலைப் புலிகள் இந்த சபையை ஏற்று, அரசு வழங்கும் அதிகாரங்களை அங்கிகரிக்கும் பட்சத்தில், அங்கு சுதந்திரமான தேர்தலை நடத்தலாம்.

கேள்வி: நீங்கள் கூறும் சபை ஓர் இடைக்கால நிர்வாக சபையாக அமையலாமா?

வாசு;- அது நிர்வாகத்தை மேற்கொள்ளும்— அதிகாரத்தை விஸ்தரிக்கும் சபையாக அமையலாம்.

கேள்வி:- தெற்கில் ஏற்பட்டுள்ள மாற்றம் பற்றி. ?

வாசு: ஐ. தே. க. காலத்தில் சிங்களப் பேரினவாதம் வளர்த்து எடுக்கப்பட்டது. இன்று புதிய அரசு அதற்கு எதிராக போராடி வெற்றி பெற்றுள்ளது. அதன் மூலம் தெற்கில் இனவாதகொள்கை தோல்வி கண்டுவிட்டது.

#### அரசுக்கு நிபந்தனை

கேள்வி: தங்கள் கட்சி அரசுடன்இணையாமல் ஏன் தனிக் குழுவாகச் செயற்படுகிறது?

வாசு: அரசுடன் சேர்ந்து செயற்பட நாம் சில நிபந்தனைகளை விதித்துள்ளோம். தேசிய பிரச்சினையான தமிழர் பிரச்சினைக்கு தீர்வு—

ஜனநாயக வழியில் செயற்படக் கூடிய நடைமுறை —

அடிமட்ட மக்களின் பொருளாதார உயர்ச்சி ஆகியன உட்பட பல நிபந்தனைகளை விதித்துள்ளோம். இந்த விடயங்களில் அரசு செயற்படும் விதத்தைப் பற்றி பார்த்தே நாம் அரசுடன் இணைவது பற்றி முடிவு செய்வோம்.

#### பொருளாதாரத் தடை

கேள்வி: வடபகுதி மீதான பொருளாதாரத் தடைபற்றி

வாசு: வடபகுதி மீதான பொருளாதாரத் தடை முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று அன்று முதல் இன்று வரை நாம் குரல் கொடுத்து வருகிறோம்.

கேள்வி: இன்று உடன் செய்யக்கூடிய நடைமுறை என்ன?

வாசு: மத்திய அரசு உடன் நிர்வாக அதிகாரங்களை வடக்கு—கிழக்கு மாகாண சபைக்கு கொடுக்க வேண்டும்.

கிழக்கில் பெரும் பிரச்சினையாக உள்ள குடியேற்றம் தொடர்பான கொள்கையில் மாற்றம் கொண்டுவரவேண்டும்.

தமிழ்மக்கள் எப்படியாவது அரசுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.

(இ-3)

சந்ததிக்கான சேவை
கற்பகச் சோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழனன்று...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது.

அதனையடுத்து கட்சியின் தற்போதைய துணைத் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐ. தே. க. வேட்பாளரான சிறிமா திஸாநாயக்கா வென்றாலும், தோற்றாலும் கட்சித் தலைமைப் பதவியை ரணில் ஏற்றுக் கொள்வதில் மாற்றமிருக்காது என கொழும்புச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

கட்சித் தலைமையை ரணில் ஏற்றதும்—

காமினி கொலையை அடுத்து ஸ்ரீகோத்தாவில் ரணில் அவமானப்படுத்தப் பட்டதற்கும், கட்சியில் தமது முக்கியத்துவத்தை குறைக்கச் செய்வதற்கும் பின்னணியில் இருந்தவர்களை கட்சியிலிருந்து தூக்கி எறிவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார் என எதிர்பார்க்கலாம் என்றும்—

இதற்கான ஆயத்த வேலை ஏற்கனவே ஐ. தே. கவில் தயாராகிவிட்டது என்றும்—

கொழும்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

(உ-எ)

## சந்திரிகாவிலும் பார்க்க

# ஆட்சி நடத்தும் அனுபவம் எனக்கு நிறையவே உண்டு

## சிறிமா திஸாநாயக்கா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 8

சந்திரிகாவிலும் பார்க்க ஆட்சி நடத்தக் கூடிய அனுபவம் தமக்கு உண்டு என்று ஐ. தே. க. ஜனாதிபதி வேட்பாளர் சிறிமா திஸாநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் —

எனக்கு ஆட்சி நடத்தும் அனுபவம் இல்லை என்று பிரதமர் சந்திரிகா கூறுவாரானால் அவருக்கு என்ன அனுபவம் உண்டு என நான் திருப்பி அவரைக் கேட்க முடியும். என்னைப் போன்று அதே காலத்தில் தான் அவரும் மாகாண சபை மூலம் அரசியலில் பிரவேசித்தார். நீதித்துறையில் நான் நன்கு அனுபவம் பெற்ற சட்டத்தரணியாக உள்ளேன். எனக்கு போதுமான அனுபவம் இருப்பதாக கருதுகின்றேன். காமினியுடன் சேர்ந்து நன்கு அரசியல் அனுபவம் பெற்றுள்ளேன்'' — என்றும் சிறிமா தெரிவித்தார்.

(ஐ-எ)

## சந்திரிகாவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரின் 2 லட்சம் வாக்குகளும் இம்முறை சந்திரிகாவுக்குத் கிடைக்கலாம் என்று பொ. ஐ. மு. வட்டாரங்கள் தெரிவித்தன.

சந்திரிகாவுக்கு பாதகமான அம்சமாக இத்தேர்தலில் இருப்பது கிராண்ட்பாஸ் குண்டுவெடிப்புச் சம்பவம் மட்டுமே என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-எ)

## நாட்டை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகப் படம் எடுத்து அவற்றை விற்பனை செய்தமை போன்ற சம்பவங்கள் தொடர்பாக தற்சமயம் இரகசியப் பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும்-

அந்த விசாரணைகள் முடிவடையும் வரை டாக்டர் விக்கிரம வீரசூரியா நாட்டை விட்டு வெளியேற இரகசியப் பொலிசார் தடை விதித்துள்ளதாகவும் 'ராவய' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## பத்து லட்சம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயரளவில் மாத்திரம் சிறிமாவுக்கு ஆதரவு வழங்குகின்றது. அவர்கள் தமது முழு சக்தியையும் பயன்படுத்தவில்லை.

இதுவும் ஐ. தே. கவின் பலவீனத்துக்கு ஒரு காரணம் ஆகும்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ. தே. க. வுக்கு மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக இருப்பதும் ஐ. தே. கவின்தேர்தல் பிரசாரத்தைப் பலவீனப்படுத்தியுள்ளது.

'ராவய' கண்காணிப்புக் குழுவின் மதிப்பீட்டின்படி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போன்று 76 சதவீதத்தினர் வாக்களித்தால் சந்திரிகா குமாரதுங்கா 45 லட்சம் வாக்குகளையும் சிறிமா 31 லட்சம் வாக்குகளையும் பெறுவார்கள்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் சிங்கள மக்களின் 36 லட்சம் வாக்குகளையும், முஸ்லிம் மக்களின் 3 லட்சம் வாக்குகளையும் வடக்கு - கிழக்கு, கொழும்புத் தமிழ் மக்களின் சுமார் 3 லட்சம் வாக்குகளையும் பெறுவார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே. க. 34 லட்சத்து 98 ஆயிரத்து 370 வாக்குகளையும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 38 லட்சத்து 67 ஆயிரத்து 675 வாக்குகளையும் பெற்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டுக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸ் 1 லட்சத்து 43 ஆயிரத்து 307 வாக்குகளைப் பெற்றது.

ஆகவே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 5 லட்சத்து 32 ஆயிரத்து 760 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றது.

கடந்த தேர்தலில் கிழக்கில் 1 லட்சத்து 32 ஆயிரத்து 961 வாக்குகளைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியும் 48 ஆயிரத்து 469 வாக்குகளைப் பெற்ற புளொட்மற்றும் அரசியல் குழுக்களும் (ரெலோ தவிர) இத்தடவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே ஆதரவு அளிக்கின்றன.

மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி, கொழும்பு ஆகிய போன்ற இடங்களில் உள்ள தமிழர் வாக்குகளின் எண்ணிக்கை சுமார் 5 லட்சத்து 50 ஆயிரம் ஆகும். இவர்களில் 70 சதவீதத்தினர் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்தால் முன்னணியின் பெரும்பான்மை வாக்கு 3 லட்சத்தால் அதிகரிக்கும்.

தொண்டமான் காங்கிரஸ், சந்திரசேகரன் முன்னணி முதலிய மலையகத்தில் உள்ள பெரிய, சிறிய அரசியல் ஸ்தாபனங்கள் அனைத்தும் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ள படியால் மலையக வாக்குகளில் பெரும்பாலானவை முன்னணிக்கே கிடைக்கும்.

இத் தடவை ஐ. தே. க. 38 முதல் 44 . 64 சதவீத வாக்குகளைப் பெறலாம். பொது மக்கள் ஐக்கிய முன்னணி 49 முதல் 55 சத[illegible] வாக்குகளைப் பெறலாம்.

[illegible] கின்றது. (க)

## இன்று

தென்மராட்சி, நவ. 8

தென்மராட்சி கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் பணிபுரியும் கல்விக்கழக ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-117)

* * *

பாடசாலைகளில் எதிர்காலத்தில் அகலமைப்பு வசதிகளைத் திட்டமிடுவது தொடர்பாக தென்மராட்சிக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று பிற்பகல் ஒருமணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-117)

## செயல்முறை பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 8

தமிழ் இளநிலைப் பொதுத் தேர்வின் விஞ்ஞானச் செய்முறைக்கான அறிவுறுத்தல், பொருள்பட்டியல், வினாத்தாள் என்பனவற்றை பாடசாலை அதிபர்கள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும்— யாழ். மாவட்டப் பாடசாலைகள் இடையேயான — உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

### யாழ். பல்கலை மைதானத்தில்

17 வயதுப் பிரிவு – கொக்குவில் இந்து எதிர் நாவற்குழி ம. வி.

19 வயதுப் பிரிவு:– கொக்குவில் இந்து எதிர் உரும்பராய் இந்து மற்றும் புங்குடு .வு ம. வி. எதிர் விக்ரோறியா.

### கொக்குவில் இந்துவில்

17 வயதுப் பிரிவு:– கலாநிதி தியாகராஜா ம. ம. வி. எதிர் அத்தியார் இந்து, டிறிபேர்க் எதிர் கனகரத்தினம் ம. ம. வி, இமையாணன் அ. த. க. பா. எதிர் அராலி இந்து.

### யாழ். மத்திய கல்லூரியில்

19 வயதுப் பிரிவு:– சென் சார்ள்ஸ் எதிர் இணுவில் மத்திய கல்லூரி

17 வயதுப் பிரிவு: ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. எதிர் தெல்லிப்பளைக் கோட்ட முதலாம் அணி மற்றும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எதிர் மானிப்பாய் மெமோறியல்

## பயனற்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும் அவை கடற்புலிகளின் தற்கொலைப் படகுகளுக்கு எளிதில் இரையாகிவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சிறிய படகுகளே கடற்புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்த சிறந்தவை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மூழ்கடிக்கப்பட்ட சாகரவர்த்தனா கப்பலின் வேகத்திலும் பார்க்க மும்மடங்கு வேகத்தில் செல்லக்கூடிய அதிவேகப் படகுகளை கடற்புலிகள் பரீட்சித்துப் பார்ப்பதாக கடற்படைத் தலைமைப் பீடம் எச்சரித்துள்ள சமயத்தில் —

ரஷ்யாவில் இருந்து பெரிய கப்பல்களை பாதுகாப்பு அமைச்சுக் கொள்வனவு செய்வது குறித்து பல இராணுவ அதிகாரிகள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

(உ-எ)

## சந்திரிகா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரிகா ஜனாதிபதி பதவியைக் கைவிட்டு பிரதமராகி விடுவார்.

பிரதமராக இருக்கும் சிறிமாவோ, சம்பிரதாயபூர்வமான ஜனாதிபதியாகி விடுவார், பிரதமர் பதவி குறித்த போட்டியையும் தவிர்க்கமுடியும்'' — இப்படி அந்தத் தரப்பினர் வாதாடுகின்றனர்.

எனவே அரசமைப்பு மாற்றம் வரும் வரை உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற சிறிமாவோ, ஜனாதிபதியாகும் மகளின் கீழ் பிரதமர் பதவியை வகிக்கும் முதல் தாய் என்ற பெருமையையும் பெறலாம் அல்லவா.

மகள் ஜனாதிபதி, தாய் பிரதமர் — இந்த ஆட்சி அடுத்த ஜூலை வரை நடை[illegible] கருதியுள்ளதாக பொ. ஐ. மு. [illegible] தலை

(இ-எ)

# காமினி கொலையுண்டதன் பின்னணியில் வெளிநாட்டு இரகசிய உளவுப் பிரிவு?

கொழும்பு, நவ. 8

காமினி திஸாநாயக்காவின் கொலையின் பின்னணியில், இலங்கையில் இயங்கிவரும் வெளிநாட்டு இரகசிய உளவுப் பிரிவு ஒன்றே சூத்திரதாரியாக இருக்கவேண்டும் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக— ''ஹிரு'' சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

சூத்திரதாரிகள் எங்கோ இருக்க வேறு வழியிலான விசாரணைகளே மேற்கொள்ளப்பட்டு வருவதால் —

கொலையை யார் செய்தார்கள் என்பது நிரந்தரமாகவே இரகசியமாக மாறிவிடலாம் என்று — அந்தப் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

காமினியுடன் நெருங்கிய தொடர்புள்ள பலர் குறிப்பிட்ட வெளிநாட்டு உளவுப் பிரிவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் —

பின்னர் காமினியின் அரசியல் நடவடிக்கைகளால் பாதிப்புற்ற அவர்கள் அந்த உளவுப் பிரிவைக் கொண்டே அவரைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டதாகவும் — அந்தப் பத்திரிகை தெரிவிக்கிறது.

இந்தக் கொலையை விடுதலைப் புலிகள் தான் செய்தார்கள் என்று காட்டி, விசாரணையை அந்தப்பக்கமாகத் திருப்புவதற்காகவே— பாலத்துறையில் குண்டு வெடித்த இடத்தில் சயனைட் குப்பி ஒன்று போடப்பட்டிருந்ததாகவும்— அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வெளிநாட்டு உளவுப் பிரிவுக்கும் இங்கு நடந்த வேறு அரசியல் கொலைகளுக்கும் சம்பந்தம் உடையதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## இன்று சூரன்போர்

யாழ்ப்பாணம், நவ. 8

கந்தசஷ்டி திருவிழா நடைபெறும் ஆலயங்களில் இன்று மாலை சூரன்போர் நிகழ்வு இடம்பெறும் கந்தபுராண படனங்களும் இன்றுடன் முடிவடையும். நாளை திருக்கல்யாணத் திருவிழா நடைபெறும்.

(அ)

## ரஷ்ய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரல் ஹமில்டன் வனசிங்கா கையெழுத்திட்டார்.

இப்போது இந்த உடன்படிக்கையின்கீழ் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய புதிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா என்ற கேள்வி தான் பாதுகாப்பு வட்டாரங்களில் அடிபடுகின்றது. அரசு இதனை மறுக்கவில்லை; ஊர்ஜிதப்படுத்தவும் இல்லை.

இதேவேளை —

இந்த உடன்படிக்கையின் கீழ் மூன்று இராட்சத அன்ரொனொவ் போக்குவரத்து விமானங்கள், எட்டு போக்குவரத்து ஹெலிக்கொப்டர்கள், இருநூறுக்கும் அதிகமான கவச வாகனங்கள் மற்றும் இரண்டு பெரிய கப்பல்கள் ஆகியவற்றை வாங்கும் முயற்சியை இராணுவம் மேற்கொண்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் உயர் நிலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது சம்பந்தமான ஒழுங்குகள் பூர்த்தி செய்யப்படும் நிலையிலிருப்பதாக, தமது பெயரை வெளியிட விரும்பாத பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை —

ஆயுதக் கொள்வனவு உடன்படிக்கையுடன் சம்பந்தப்பட்ட ரஷ்ய ஆயுத நிறுவனமான ''லொயின் ரெக்'' கின் மூன்று அதிகாரிகள் கொழும்பு வந்து பாதுகாப்பு உயர் அதிகாரிகளையும் ஜனாதிபதி விஜேதுங்காவையும் சந்தித்துப் பேசினார்கள்.

ரஷ்ய ஆயுத கொள்வனவு உடன்படிக்கையை இடைநிறுத்தஞ்செய்வதாக பொ. ஐ. மு. அரசு அறிவித்த சில தினங்களில் இச் சந்திப்புகள் இடம்பெற்றன என்று ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டுள்ளது.

(உ-எ)

## பிரதமரை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகத்தெரிவிக்கப்படுகின்றது.

இரகசியப் பொலிஸார் தகவல் ஒன்றின் அடிப்படையில் இந்தத் தேடுதலை நடத்தியதாக தகவல், ஒலிபரப்பு, விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையப் பகுதியில் வைத்து காமினி திஸாநாயக்காவின் இணைப்புச் செயலாளர் ஒருவரின் கைகளிலிருந்து பிரதமர் சந்திரிகாவை அவதூறு செய்யும் பிரசுரங்களை பொலீஸார் கைப்பற்றினர் என்றும் —

அவர் விசாரிக்கப்படுகையில் அத்தகைய துண்டுப்பிரசுரங்கள் வேறு சில இடங்களிலும் உள்ளன என்ற தகவல் பொலீஸாருக்குக் கிடைத்தது என்றும் —

இதனையடுத்தே எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் காமினி பயன்படுத்திய உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலும் காமினியின் சொந்த வீட்டிலும் தேடுதல் நடத்தப்பட்டது என்றும் —

ஆனால் பிரச்சினைக்குரிய பிரசுரங்கள் ஏதும் அங்கு கைப்பற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமது வீட்டைச் சோதனையிட இரகசியப் பொலீஸாரை அனுப்பியதன் மூலம் அரசு தன்னை அவமானத்துக்கும், [illegible]டத்துக்கும் உள்ளாக்கிவிட்டதாக சிறிமா திஸாநாயக்கா குற்றஞ்சாட்டினார்.

(உ-ஐ-க-ரி)

## தெற்கில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தும் ஆதரவாளர்கள் மிரட்டல்களும், தேர்தல் துஷ்பிரயோக நடவடிக்கைகளும் இடம்பெறுவதாக பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

கடந்த மூன்று நாட்களில் இடம்பெற்ற வன்செயல்கள் மற்றும் உயிரிழப்புகள் குறித்து தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவும் கவலை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளை சந்தித்துப் பேசிய பின்னர், கொழும்பு உட்பட குழப்பங்கள் இடம் பெறக்கூடும் எனக்கருதப்படும் இடங்களில் பொலீஸ் ரோந்துகள் நேற்று மாலை முதல் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை —

தேர்தல் தினத்தன்று பிற்பகலிலும் மறுநாளும் ஏற்படக்கூடிய வன்செயல்களை கட்டுப்படுத்தக் கூடியதாக இராணுவத்தினரும் பொலீஸாரும் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எந்த நெருக்கடியையும் சமாளிக்கக் கூடிய நிலையில் இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

(உ-எ-)

## அவசரகால சட்டம் தளர்வு

கொழும்பு, நவ. 8

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு கொழும்பில் அமுலில் உள்ள அவசரகாலச் சட்டம் இன்றும் நாளை புதன்கிழமையும் தளர்த்தப்படுகின்றது. அரச பேச்சாளர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

(உ-6)

## சந்திரிகா சிறிமா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 21 ஆம் நூற்றாண்டுக்கு இட்டுச் செல்ல மக்கள் தனக்கே வாக்களிப்பர் என்று சிறிமா திஸாநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு — கிழக்குப் பிரச்சினைக்கு தனிபொருவராக நான் தீர்வு காணப்போவதில்லை. நாட்டில் உள்ள சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி உரிய தீர்வைக் காண்பேன்—என்று சிறிமா குறிப்பிட்டுள்ளார்.

## சந்திரிகா வென்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கிடையில் —

இப்போதைய நெருக்கடி காரணமாகவோ அல்லது முன்னைய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்த அனுபவத்தை முன்வைத்தோ தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதான முயற்சியைக் கைவிடுவது பொருத்தமற்ற செயலாகும் என்று நீதி. அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

எத்துணை நெருக்கடி ஏற்படினும் சமாதானத்தை ஏற்படுத்துவதே பொ. ஐ. மு அரசின் முக்கிய கொள்கையாகும் என்றும் அவர் கூறியுள்ளார்

(உ-எ-6)

---

# மரண அறிவித்தல்கள்

## சரவணமுத்து இராசையா

தொல்புரம் கிழக்கைச் சேர்ந்த சரவணமுத்து இராசையா இளைப்பாறிய உதவி தொழில் ஆணையாளர், 14 – 10 – 1994 இல் 45, விவேகானந்த வீதி, வெள்ளவத்தையில் சிவபதமானார்.

இவர் சோதிரட்ணத்தின் அன்புக் கணவரும், Dr. பரஞ்சோதி (Canada), திலகன், கனகரட்ணம் (சட்டத்தரணி), நிமலன், கார்த்திகேயன் (Atiken Spence), Dr. மங்களஜோதி (U.S.A.) ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வி நாகம்மா காசிப்பிள்ளை (இளைப்பாறிய அதிபர்) யின் மைத்துனரும், Dr. பிரியதர்சினி, செல்வநிதி, ஜீவகி, Dr. ஹரிஹரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அர்ச்சுனா, ஆரதி, அரோ, ரமணன், துவாரகா, ஆரணி, தாரணி, பூரணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கனத்தை மயானத்தில் 20 – 10 – 1994 இல் நிறைவேறியது. இத்தகவலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. கந்தசாமி.

திருதணி,
சுன்னாகம். [7699]

## சுந்தரம்பிள்ளை இராசரத்தினம்

(ஓய்வுபெற்ற விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர் வேலணை)

வேலணை கிழக்கைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை இராசரத்தினம் 06-11-1994இல் கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, சிவக்கொழுந்து ஆகியோரின் அருமை மகனும், காலஞ்சென்ற சிவசம்பு, யோகம்மாவின் அன்பு மருமகனும், மங்கையர்க்கரசியின் அருமைக்கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், செல்லத்துரை பாக்கியலெட்சுமி, சிவரத்தினம் (ஓய்வு பெற்ற அதிபர் [கனடா]) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகேஸ்வரி (அவுஸ்திரேலியா), ஆனந்த நடராசா, ரதி ஆகியோரின் மைத்துனரும், சிவநாதன் (வேலணை ப. நோ. கூ. சங்கம்), இராஜேஸ்வரி (கொழும்பு), சோதிநாதன் (U. K.), மயூரநாதன் (U. K.), கண்ணன் (பெறாமகன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஞானசௌந்தரி (விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர்-வேலணை), பத்மநாதன் (தோட்ட முகாமைத்துவம்-கொழும்பு), ஜெசிந்தா (U. K.), பவிந்தா (U. K.) ஆகியோரின் அன்பு மாமனாரும், வாசீசன், ஆரூரன், அனுராதா, ஆரணி, ரமணன், றொசான், மீரா, கவிதா, சேயோன், கார்த்திபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-11-1994இல் கொழும்பில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஞா. சிவநாதன்

6/3, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். [33682]

## சண்முகம் இளையதம்பி

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சண்முகம் இளையதம்பி 6- 11- 94 இல் கொழும்பில் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேதநாயகம் தம்பதிகளின் மருமகனும், பெரியதம்பி, காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, ஐயம்பிள்ளை, தம்பு, சின்னையா ஆகியோரின் அன்பு சகோதரரும், தனபாலசிங்கம் (நில அளவையாளர்), இராசேந்திரம் (டுபாய்), கந்தசாமி (லண்டன்), கேதீஸ்வரன் [கனடா], சிறிதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அகிலான்டேஸ்வரி, சற்குணதேவி, நாகேஸ்வரி, அம்பாள், சுகந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08- 11- 94 இன்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்;
இ. தனபாலசிங்கம்
(மகன்)

இல. 09, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். [33687]

# மரண அறிவித்தல்கள்

## செல்வி கிரிசாந்தி ஜெயசிங்கம்

(ஜோன் பொஸ்கோ வித்தியாலய 1 ஆம் ஆண்டு மாணவி)

செல்வி கிரிசாந்தி ஜெயசிங்கம் 07– 11– 94 அன்று காலமானார்.

இவர் ஜெயசிங்கம் (B. M. C. வவுனியா) –றெஜிவதனி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், தியாகராசா, காலஞ்சென்ற றெயினாதீற்ரா, செந்தில்வேல், ஜெயமணி ஆகியோரின் அனபுப்பேர்த்தியும், தினேஸ்குமாரின் அன்புத் தங்கையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 8–11- 94 பிற்பகல் 3. 30 மணியளவில் புனித ஆச்சர்வாதப்பர் ஆலயத்தில் இருந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
செ. ஜெயசிங்கம்
(தந்தை)

46/11, ஆசீர்வாதப்பர் வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம். [33689]

## திருமதி சிவபாக்கியம் நாகேசு

வட்டு வடக்கு சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவபாக்கியம் நாகேசு நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகேசுவின் அன்பு மனைவியும், நாகரத்தினம், நவரத்தினம் (கட்டட ஒப்பந்தக்காரர்), புஸ்பராஜா, கலாவதி, பரமவதி, விமலவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பிஐயா (இளைப்பாறிய அதிபர்), உமாதேவி, சற்குணதேவி, ஸ்ரீபுஸ்பகாந்தன் (கிறீஸ்), பரமேஸ்வரன் (கட்டட ஒப்பந்தக்காரர்), சரவணபவா (கற்பகப் பிள்ளையார் பொதிப் போக்குவரத்துச் சேவை) ஆகியோரின் அன்பு மாமியும், சிவானந்தன் (சவுதி), கடம்பானந்தன் (ஆசிரியர், திருவடிநிலை சை.த.க பாடசாலை) குகானந்தன் (பல்கலைக் கழகக் கல்லூரி, வவுனியா), தெய்வநாயகி, லோகநாயகி, தனரத்தினம் (சுவிஸ்), சிவ்வானா (சுவிஸ்), இராஜினி, கிருஷ்ணமூர்த்தி, சண்முகரத்தினம் (யா/விக்ரோறியாக் கல்லூரி), சுபாஜினி, நாகராஞ்சன், சிவகணேசன், நாகசாந்தி, மயூரன், கஜந்தன், சங்கரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மனுவல், மயூரன், தர்சினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8–11–94) காலை 10–30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
நா. நவரத்தினம்
நா. புஸ்பராஜா
(மகன்மார்)

வட்டு கிழக்கு,
சித்தன்கேணி. (33688)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org